**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 163/மா/2022**

**நாள் : 01.11.2022**

திரு P.சிவாஜி,
புதுவிளாங்குடி, மதுரை – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் –05, (மேற்கு) மதுரை மாநகராட்சி,
மதுரை – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், மனை எண்.8–ல் வசிக்கும் திரு.P.சிவாஜி என்பவரின் 05.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.09.2022-ல் பெறப்பட்டு 163/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், மனை எண்.8–ல் வகிக்கும் திரு.P.சிவாஜி என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

“ நான் கடந்த 19.08.2022ம் தேதியில் பதிவு தபாலில் மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு புகார் மனு அனுப்பி இருந்தேன். அம்மனுவில் மதுரை மாநகராட்சி 80வது வார்டு மண்டலம் 05(மேற்கு) ஜெய்ஹிந்த்புரம், நேதாஜி ரோடு, கடைசியில் உள்ள M.G.R. கிழக்குத் தெருவில் பொதுப்பாதை இருபது அடி(20) ஆகும். இந்த பொதுப்பாதையை, மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியான திரு T. நாகராஜன் அவர்கள், மதுரை மாநகராட்சியின் துணை மேயராக இருக்கிறார். இவர் பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து 20 அடி அகலப்பாதை தற்போது 7(ஏழு) அடியாக உள்ளது. மக்கள் பிரதிநிதியாகிய திரு T. நாகராஜன் அவர்கள் துணை மேயர் என்ற தோரணையும், அரசியல் செல்வாக்கு மற்றும் குண்டர்கள் வைத்து இருப்பதினால், பொதுமக்கள் நேரடியாக சென்று கேள்வி கேட்க முடியாமல் உள்ளார்கள். இந்த ஆக்கிரமிப்பு குறித்து அங்குள்ள

பொதுமக்கள் என்னை அனுகி மேற்படி ஆக்கிரமிப்பு பற்றி என்னிடம் கூறவே, நான் நேரடியாக பார்த்தபோது பொதுப்பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதற்கான ஆதாரமாக போட்டோ எடுத்துக்கொண்டேன். நான் ஆக்கிரமிப்பு குறித்து மதுரை மாநகராட்சி ஆணையருக்கு 19.09.2022ந் தேதியில் புகார் கொடுத்தும் M.G.R. கிழக்கு தெரு பொதுப்பாதை ஆக்கிரமிப்புகள் அகற்றித்தர எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆக்கிரமிப்பு செய்தவர் திரு Nagarajan துணை மேயராவார்.

மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் மண்டலம் 5 (மேற்கு) அவர்கள் மேற்படி ஜெய்ஹிந்த்புரம் M.G.R. கிழக்கு தெரு பொதுப்பாதை ஆக்கிரமிப்புக்களை அகற்ற நடவடிக்கை எடுக்க தவறிய, மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர், மண்டலம் 05 (மேற்கு) அவர்கள் மீது துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும் மேற்படி 20 அடி அகல பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து இருக்கும் துணை மேயரான திரு T. நாகராஜன் அவர்களை பதவியில் இருந்து நீக்கம் (disqualification) செய்ய துரித நடவடிக்கை எடுத்தும் பொதுப்பாதை ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றியும் அத்துமால் காண்பித்தும் கல் ஊன்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு 20 அடி அகலபாதையை கொண்டுவர உத்தரவிடுமாறு மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி மதுரை மாநகராட்சி உதவி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 11.10.2022 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் 11.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மதுரை மாநகராட்சி, 80 வது வார்டு, மண்டலம்–5 (மேற்கு) ஜெய்ஹிந்த்புரம், நேதாஜி தெருவுக்கு கடைசியில் உள்ள MGR கிழக்குத் தெருவில் 20 அடி பொதுப்பாதை உள்ளது. மதுரை மாநகராட்சியின் துணை மேயராக உள்ள திரு T. நாகராஜன் என்பவர் இப்பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து வீட்டை கட்டியுள்ளதால், 20 அடி அகல பாதை இப்போது 7 அடி அகலப் பாதையாக குறைந்துள்ளது. மாநகராட்சி அலுவலர்களிடம் இதுபற்றி புகார் அளித்தபோது, அங்கு ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை. பத்திரத்தின்படி சரியாக உள்ளது என தெரிவித்துள்ளனர். ஆனால், அவர்களின் பத்திரத்தில் மேற்கண்ட இடத்தில் 20 அடி பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு கட்டப்பட்டுள்ள வீடுகள் பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீடு என்கின்ற திட்டத்தில் கட்டப்பட்டவை. 300 அடி இடம் கொண்ட இடத்தில் அங்கு 3 மாடி கட்டிடங்கள் விதிகளுக்கு முரணாக கட்டப்பட்டுள்ளன. அவ்வாறு விதிகளை மீறி கட்டும் போது மேற்கண்ட ஆக்கிரமிப்புகள் நடைபெற்றுள்ளன. எனவே, மேற்கண்டஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் (மண்டலம்–5) ஆகியோரிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட இடத்திற்கு புல எண்.69/3ல் அத்துமால் காண்பித்து, கல் ஊன்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஆக்கிரமிப்பை மேற்கண்ட 20 அடி பாதையை கொண்டுவருவதற்கும், ஆக்கிரமிப்பை கண்டும் காணமல் இருந்த மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறும் இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) 11.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் மதுரை மாநகராட்சியின் உதவி ஆணைய ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள சாலையானது மதுரை மாநகராட்சி பெயரி தனியாக உட்பிரிவுகள் ஏதும் செய்யப்படாமல் பட்டா இடமாகவே தனி நபர் பெயரில் நகரளவை ஆவணங்களின்படி தாக்கலாகியுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்து நகரளவரின் குறிப்பி நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக எனது 10.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள் விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மதுரை மாநகரரட்சி உதவி ஆணையர் தனது 10.10.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்ககண்டவா தெரிவித்துள்ளார்:

" மனுதாரர் அளித்த மேற்படி புகார் மனுக்கள் சம்மந்தப்பட்ட வார்டு உதவி பொறியாளருக் அனுப்பப்பட்டது. புகார் மனுவில் குறிப்பிட்ட இடம் ஆக்கிரமிப்பில் உள்ளதா என்பதை தெளிவுபடுத்த வார்டு பொறியாளர், அக்கோப்பினை நகரளவையருக்கு அனுப்பி நகரளவையரிடம் குறிப்பு பெறப்பட்டதி மேற்படி இடம் பத்திரப்பதிவு ஆவணங்களின் அடிப்படையில் பின்வரும் விபரப்படி ஆக்கிரமிப் உள்ளதாக குறிப்பு மற்றும் sketch வரைபடத்துடன் நகரளவையர் குறிப்பு வழங்கியுள்ளார். அதன் விப பின்வருமாறு:

M.G.R. கிழக்கு தெரு கடைசியில் முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனுதாரர் புக தெரிவித்த இடம் பொதுப்பாதை முடிவு பெறும் இடமாக (முட்டுச்சந்து) உள்ளது. M.G.R. நகர் கிழக தெருவின் கடைசி ஆகும். அதன் பின்னர் அத்தெரு வேறு எங்கும் செல்லவில்லை. நீட்டிப்பு இல்ல பத்திரப்பதிவு ஆவணங்களின் அடிப்படையில் முட்டுச்சந்து இடத்தில் பொதுமக்கள் சென்று வர வாய் இல்லை.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் மேல்முறையீட்டாளரான புகார்த தனது 19.08.2022 நாளிட்ட புகார் மனுவின் நகலை மாவட்ட ஆட்சியருக்கும், மதுரை மாநகரா ஆணையருக்கும் அனுப்பி விட்டு, அதே சமயம் 05.09.2022ல் போதுமான அவகாசம் ஏதும் இல்லா தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் மனுதாரின் புகாரின் மீது மதுரை மாநகரா நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று 15 நாட்கள் கூட இடைவெளி இல்லாது புகார் தெரிவித்துள்ள என்ற விபரம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு பணிவு சமர்ப்பிக்கப்படுகிறது.

மேல்முறையீட்டாளரின் புகார் மனு (19.08.2022 தேதியிட்டது) மாவட்ட ஆட்சியருக்கும், மாநகரா ஆணையருக்கும் முகவரியிட்டது மாநகராட்சிக்கு கிடைக்கப்பெற்று, மாநகராட்சி மண்டலம்–5 அனுப்பப்பட்டு 23.09.2022ல் நகரளவையர் குறிப்பு பெறப்பட்டது. நகரளவையர் குறிப்பு மேல்முறையீட்டாளர் (புகார்தாரர்) குறிப்பிட்ட பொதுப்பாதை இடம் தற்போது வரை தனிநபர் பெயரில் உ பட்டா இடமாக உட்பிரிவு (sub-division) செய்யப்படாத மனையிடமாகவே உள்ளது, மேற்கண்ட இ தொடர்பாக உரிமையாளர் திருமதி N. செல்வராணி அவர்களுக்கு உரிய விளக்கம் மற்றும் பா ஒப்படைப்பு ஆவணங்கள் சமர்ப்பிக்கும்படி கடிதம் வைக்கப்பட்டுள்ளது. உரிய விசாரணை மேற்கொ

மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் நடுவத்திற்கு பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

மனுதாரர் மதுரை மாநகராட்சி, 80வது வார்டு, மண்டலம் 5 (மேற்கு) ஜெய்ஹிந்த்புரம் நேதாஜி தெருவுக்கு கடைசியில் உள்ள M.G.R.கிழக்கு தெருவில் 20 அடி பொதுப்பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது எனவும் அதனை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் எனவும் இந்த ஆக்கிரமிப்பை கண்டும் காணாமல் இருந்த மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திட புகார் மனு அளித்துள்ளார்.

நகரளவையர் குறிப்புப்படி மனுதாரர் குறிப்பிட்ட பொதுப்பாதை இடம் தற்போது வரை தனி நபர் பெயரில் உள்ள பட்டா இடமாக உட்பிரிவு (sub-division) செய்யப்படாத மனையிடமாகவே உள்ளது. மேற்கண்ட இடம் தொடர்பாக உரிமையாளர் திருமதி. N. செல்வராணி அவர்களுக்கு உரிய விளக்கம் மற்றும் பாதை ஒப்படைப்பு ஆவணங்கள் சமர்ப்பிக்கும்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் உரிய விசாரணை மேற்கொண்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மதுரை மாநகராட்சி மண்டலம் 5ன் உதவி ஆணையாளர் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

நகரளவர் குறிப்பிலிருந்து நான்குமாலின் அடிப்படையில் தெற்கே 20 அடி அகல கிழமேல் பொது ரோடு என காட்டப்பட்டுள்ளது. ஆவணத்தில் வடபுறம் –16, தென்புறம்–16, தென்வடலடி மேல்புறம் கீழ்புறம் 34(தென்புறம் ரோடு மனையிடம் 10 அடி உட்பட) என உள்ளது. அதன்படி அளவு பணி செய்ததில் மேற்கண்ட தாவாக்குரிய மனையானது மேல்புறமும் கீழ்புறமும் பாதை 10 அடி நீங்கலாக 24 அடி இருக்க வேண்டும். மேற்கண்ட இடத்தை பார்வையிட்டதில் கீழ்புறம் 32 அடியும் மேல்புறம் 29 அடியும் உள்ளது எனவும் தாவாக்குரிய மனை அமைந்துள்ளது எனவும் அந்த தெருவின் முடிவில் முட்டு சந்தாக அமைந்துள்ளது எனவும் அதன் பின்புறம் சாலை தொடர்ச்சியாக இல்லை என்பதையும் நகரளவர் குறிப்பின்படி அறிய முடிகிறது.

தெருவினில் ஆக்கிரமிப்பு குறித்தும், சட்ட விரோதமாகவும், அனுமதியில்லாமலும் கட்டப்படும் கட்டடங்களை அகற்றுவது குறித்தும் மதுரை மாநகராட்சியின் ஆணையாளருக்கு உள்ள அதிகாரங்களை Madurai City Municipal Corporation Act 1971ல் பிரிவு 256 மற்றும் 258ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்டுகிறது.

256. Prohibition against obstructions in streets:-

No one shall build any wall or erect any fence or other obstruction or projection or make any encroachments in or over any street or any public place the control of which is vested in the Corporation except as hereinafter provided.

258.Removal of encroachments:-

(i) The Commissioner may, by notice, require the owner or occupier of any premises to remove or alter any projection, encroachment or obstruction (other than a door, gate, bar or

ground-floor window) situated against or in front of such premises and in or over any street or any public place the control of which is vested in the Corporation.

(ii) If the owner or occupier of the premises proves that any such projection, encroachment or obstruction has existed for a period sufficient under the law of limitation to give him a prescriptive tile or where such period is less than thirty years, for a period of thirty years or that it was erected with the consent of any municipal authority duly empowered in that behalf, and the period if any, for which the consent is valid has not expired, the corporation shall make compensation to every person who suffers damage by the removal or alteration of the same.

உச்சநீதிமன்றமும், சென்னை உயர்நீதிமன்றமும் கட்டட அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்கள் மீதான தங்களது தீர்ப்புகளில் சம்மந்தப்பட்ட அரசு நிர்வாக அமைப்புகளை கடுமையாக சாடி வருவதையும் கண்டனங்களையும் பொருட்படுத்தாமல் சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் அலட்சியமாக செயல்படுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

உதவி ஆணையர்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவில் சம்மந்தப்பட்ட பொறியாளர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தி, மாநகராட்சியிடம் கட்டட அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டடங்கள் குறித்து ஆய்வு செய்ய வேண்டும். அந்த ஆய்வுக்கூட்டங்களில், கட்டட அனுமதி பெறாமல் கட்டடங்கள் கட்டப்படுவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை சுட்டிக்காட்ட வேண்டும். மேலும் அவற்றால் அருகில் வசிப்பவர்களுக்கு ஏற்படும் பல்வேறு இடையூறுகளையும் எடுத்துரைக்க வேண்டும். ஆய்வுக்குப்பின், மாநகராட்சி அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டடங்களின் உரிமையாளர்கள் மீது நடைமுறையிலுள்ள உரிய சட்டவிதிகளின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுரைகள் வழங்க வேண்டும். மேல் நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் மீது எவ்விதத் தயக்கமுமின்றி துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எச்சரித்து அனைத்து உதவி ஆணையர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்ப வேண்டும் என மதுரை மாநகராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்றம் பரிந்துரைத்து ஆணையிடுகிறது.

இம்முறைமன்றத்தில் ஆணையின்படி சமர்ப்பித்துள்ள அறிக்கையின்படி உரிய விசாரணை மேற்கொண்டு தக்க மேல் நடவடிக்கை விரைந்து எடுத்திட சம்மந்தப்பட்ட உதவி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் உத்தரவிடுகிறது. இதனை மதுரை மாநகராட்சி ஆணையர் உறுதிப்படுத்திட வேண்டும்.

நகரளவர் குறிப்பிலிருந்து மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள இடத்தில் பாதை ஆக்கிரமிப்பு உள்ளது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. எனவே கள ஆய்வு செய்யாமல் கடமை தவறியது மட்டுமல்லாமல் மற்றும் உரிய நேரத்தில் விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்காமலும் விதி மீறி அனுமதியின்றி ஆக்கிரமிப்பு செய்பவருக்கு மாநகராட்சி அலுவலர்கள் துணைபோய் இருப்பது புலனாகிறது. இந்நிகழ்வில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்றம் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடுகிறது. ( 3 ) மூன்று மாத காலத்தில் இதனை முடித்து நடுவத்துக்கு அறிக்கை அனுப்ப ஆணையிடப்படுகிறது.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 01-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு P. சிவாஜி,
   எண்.8, செம்பருத்தி நகர்,
   புதுவிளாங்குடி,
   மதுரை – 625 018.
2. ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை.
3. துணை ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை. (He is requested to ensure the implementation of this order)
4. உதவி ஆணையர்,
   மண்டலம் (05)
   மதுரை மாநகராட்சி,
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
6. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
2-11-2022

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 01-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு P. சிவாஜி,
   எண்.8, செம்பருத்தி நகர்,
   புதுவிளாங்குடி,
   மதுரை – 625 018.
2. ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை.
3. துணை ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை. (He is requested to ensure the implementation of this order)
4. உதவி ஆணையர்,
   மண்டலம் (05)
   மதுரை மாநகராட்சி,
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
6. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

2-11-2022